4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 9/2022 நாள்: 19.11.2025 வா.சா.1 – கனகராஜ்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2 மற்றும் 3வது எதிர் மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை -**

விபத்தில் இறந்தது எனது மகன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்காததால் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து கோவை சரவணம்பட்டியில் வைத்து நடைபெற்றது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் 3 சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். எனது மகன் கிளை சாலையிலிருந்து பிரதான சாலைக்கு வரும்போது பேருந்துக்கு பின்புறமாக வந்த ஒரு இருசக்கர வாகனம் பதிவு எண்.TN 99 9480 என்ற வாகனம் பேருந்தின் இடதுபக்கமாக முந்தி செல்ல முயற்சித்த போது எனது மகன் பிரதான சாலையை கடக்கும் போது அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு பேருந்து காரணமல்ல, மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த 1வது எதிர் மனுதாரர் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது, அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எனது மகன் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டியதால் விபத்தின் போது காயம் ஏற்பட்டு இறந்துள்ளார் என்றும், எனவே விபத்திற்கு எனது மகனும் தற்செயல் கவனமின்மைக்கு ஒரு காரணம் என்றால் சரியல்ல. எனது மகன் வெளிநாட்டில் வேலை பார்த்து மாதம் ரூ.83 ஆயிரம் சம்பாதித்துள்ளார் என்று நான் சொல்லியுள்ளேன், அவர் எந்த நிறுவனத்தில் அவர் வெளிநாட்டில் வேலை பார்த்தார், அதற்கான ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எனது மகனின் வங்கி கணக்கு புத்தகத்தில் எனது மகன் மாதம் ரூ.83 ஆயிரம் சம்பளம் வாங்கியதற்கான தரவுகள் இல்லை என்றால் சரியல்ல. எனது மகனுடைய வங்கி கணக்கு புத்தகங்களில் வெவ்வேறு மாதங்களில் வெவ்வேறு தொகை பெற்றுள்ளதாக உள்ளது, அதனடிப்படையில் அவர் மாதம் ரூ.83 ஆயிரம் சம்பாதித்தார் என்று நிரந்தர வருமானமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனது மகனுக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். விபத்து எனது மகன் மற்றும் 1வது எதிர்மனுதாரர் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதாலும், 1வது எதிர் மனுதாரர் தான் விபத்திற்கான இழப்பீட்டை எங்களுக்கு தரவேண்டும் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் எனது மகன் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி, அதன் தொடர்ச்சியாக எனது மகனின் பேருந்தின் பின்சக்கரம் ஏறி விட்டது என்றால் சரியல்ல. 1வது எதிர் மனுதாரர் அதிவேகமாக வந்து எனது மகனின் மீது மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் விபத்திற்கு பொறுப்பானவர்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிர்மனுதாரர்களை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.19 16:15:44 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.